வெளிவந்துவிட்டது!
விற்பனையாகிறது!
ஆண்டு-5 புலமைப் பரிசில் பயிற்சி
21 கட்டுரைகள்
10 வினாத்தாள்கள் (விடைகள்)
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper
உதயன்
விலை ரூபா 5-00

★ புதிய வகுப்புகள் ★
1994 கல்வியாண்டிற்காக புதிய வகுப்புகள்
ஆரம்பம்: 05 — 12 — 93
ஞாயிறு முற்பகல் 8மணி
ஆண்டு-3 முதல் ஆண்டு-9 வரை
புலமைப் பரிசில்
சனி, ஞாயிறு வகுப்புகள்
புதிய கல்வி நிலையம்
219, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 12 சனிக்கிழமை (27 – 11 – 1993) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 01

அரசு இராணுவ வழியை இறுகப் பற்றிநின்றால்
சமாதான கதவுகளை நிரந்தரமாக மூடிவிடுவோம்!

மாவீரர் சுடர்களினால் எங்கும் ஒளிவெள்ளம்

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழ் மண்ணை மீட்பதற்காக, தமிழர்களின் விடுதலைக்காக, தங்கள் இன்னுயிரைத் தற்கொடை செய்த மாவீரர்களுக்கு —

ஆலயங்கள், தேவாலயங்கள், பாடசாலைகளில் சமகாலத்தில் ஓங்கி ஒலித்த மணி ஓசையின் மத்தியில் — மாவீரர் நினைவொலியின் போது —

இன்று அதிகாலை 12 மணி ஒரு விநாடி தொடக்கம் 12 மணி 2 நிமிடம் வரை தமிழீழ மக்கள் அந்தந்த இடங்களில் நின்றவாறே தமது அஞ்சலியைச் செலுத்தினர். இரண்டு நிமிட நேரம் அமைதி வணக்கம் செலுத்தினர்.

அந்த அமைதி வணக்கத்துடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் எழுச்சி பூர்வமாக ஆரம்பமாகின.

அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து 12 மணி 2 நிமிடத்துக்கு மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் சுடர்கள் ஏற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து நினைவுப் பந்தல்களிலும், வீடுகளிலும், பொது இடங்களிலும் மாவீரர் சுடர்கள் ஏற்றப்பட்டன. அவ்வேளை யாழ். குடாநாடு உட்பட தமிழீழப் பிரதேசம்

(4ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் தமிழர் நேற்று வீடுகளில் முடங்கி கிடந்தனர்

அசம்பாவிதம் எதுவும் இல்லை

கொழும்பு, நவ. 27

கலவரம் வெடிக்கலாம் என்ற பீதியினால் கொழும்பில் வசிக்கும் தமிழர்களில் பெரும்பாலானோர் நேற்று வீடுகளுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தனர் என்று பி. பி. ஸி. சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் பொலீஸாரும் படையினரும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் மற்றும் தமிழருக்கு எதிரான வன்முறை ஆகியவற்றை தடுக்கும் நோக்கத்துடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் எதிர்பார்க்கப்பட்டது போன்று அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பி. பி. ஸி. சிங்களச் சேவையில் எல்மோ பெர்னாண்டோ இதுபற்றிக் கூறுகையில்,

''கொழும்பில் விடுதலைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

வீதிகள் வெறிச்சோடின கடைகளும் மூடப்பட்டன

கொழும்பு, நவ. 27

கொழும்பு மாநகரில் நேற்று பதற்றம் நிலவியது.

குறைவான மோட்டார் வாகனங்களே வீதிகளில் செல்லக் காணப்பட்டன.

வழக்கமாகப் பயணிகளால் நிரம்பி வழியும் பஸ்களிலும் ரயில்களிலும் அரைப்பங்குக்கு மேற்பட்ட ஆசனங்கள் காலியாகவே காணப்பட்டன.

சில பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன. இயங்கிய பாடசாலைகளில் மாணவர் வரவு குறிப்பிடுமளவுக்கு குறைந்து காணப்பட்டது.

கொழும்பில் குண்டுகள் வெடிக்கக்கூடும் என்ற பீதியால் பெரும்பாலான பெற்றோர் தங்கள் குழந்தைகளை பாடசாலைகளுக்கு அனுப்பவில்லை.

சில வர்த்தக நிலையங்களும் காரியாலயங்களும் மூடப்பட்டிருந்தன. இயங்கிய காரியாலயங்களிலும் பெரும்பாலான ஊழியர்கள் கடமைக்குச் செல்லவில்லை.

கொழும்பு மனிங் சந்தையில் உள்ள பெரும்பாலான கடைகளில் கறுப்புக் கொடிகள் பறந்தன.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் பிறந்த நாளை ஒட்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

தேசியத் தலைவர் பிரபாகரன் தெட்டத் தெளிவாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 27

''சிங்களப் பேரினவாத அரசு போன்று, நாம் இன்னும் சமாதானக் கதவுகளை அடைத்து விடவில்லை; சமரசப் பாதைக்கு முட்டுக்கட்டை போடவில்லை. ஆனால் சிங்கள ஆட்சிபீடம் தனது இராணுவ அணுகுமுறையை இறுகப் பற்றிக் கொண்டு, எமது மண் மீது படையெடுப்பை நிகழ்த்தினால், அல்லது எமது மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடருமானால், எமது விடுதலை இயக்கம் சமாதானத்தின் கதவுகளை நிரந்தரமாகவே மூடிவிடும் என்பதை நான் இங்கு தெட்டத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.''

—இவ்வாறு அறிவித்துள்ளார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

இன்றைய மாவீரர் நாளை முன்னிட்டு தலைவர் வழங்கிய விசேட செய்தியிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்திருக்கிறார்.

அந்தச் செய்தியில் தலைவர் பிரபாகரன் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே, இன்று மாவீரர் நாள்.

எமது சுதந்திர இயக்கத்தின் சரித்திரச் சிற்பிகளான விடுதலை வீரர்களை நாம் நினைவுகூரும் நன் நாள்.

ஆண்டாண்டு காலமாக அடிமைவிலங்கில் முடங்கிக் கிடந்த எமது தாயகத்தை, வீறுகொண்டு எரியும் விடுதலைக் களமாக மாற்றிவிட்ட வீர மறவர்களை நாம் நினைவுகொள்ளும் புனித நாள்.

எமது நாடு எமக்கே சொந்தம் என்ற உரிமைக்குரலை உலகெங்கும் முழங்கச் செய்த உன்னத தியாகிகளை நாம் எமது நெஞ்சப் பசுமையில் நிறுத்திக்கொள்ளும் தேசிய நாள்.

இன்று தேசிய எழுச்சி தினம்

மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்கதினம் அல்ல. நாம் கண்ணீர் சிந்திக் கவலை கொள்ளும் சோகதினமல்ல. இன்றைய நாள் ஒரு தேசிய எழுச்சி தினம். எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சி தினம்.

மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு சாதாரண மரண நிகழ்வு அல்ல. எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது.

எமக்கு ஒரு நாடு வேண்டும்; எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்; எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள். எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீரசுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கிறது.

இந்த நிலத்தின் நெஞ்சில் படுத்துறங்கும் எமது மாவீரர்களின் கல்லறைகளில் இருந்து இந்த சுதந்திரப் பிரகடனங்களின் பேரொலி எழுகிறது. ஆறாயிரத்திற்கும் அதிகமான இலட்சிய வேங்கைகளின் சத்திய வாக்காக இந்த விடுதலை முழக்கம் கேட்கிறது. இந்த விடுதலை முழக்கத்தில் எழுச்சி கொண்டே எமது இலட்சியப் பயணம் தொடர்கிறது.

தமிழீழ தனியரசு ஒன்றே பிரச்சினைக்கு இறுதித்தீர்வு

இரத்தம் சிந்தும் அரசியலாக எமது போராட்ட வரலாறு நீண்டு செல்கிறது. எமது விடுதலை இயக்கம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்றுவரை, இந்த நீண்டகால இடைவெளியில், நாம் எத்தனையோ நெருக்குதல்களையும், சோதனைகளையும், ஆபத்துக்களையும் சந்தித்தபோதும் எமது அடிப்படையான அரசியல் இலட்சியத்தில் இருந்து என்றுமே நாம் தளர்ந்ததும் இல்லை; தடுமாறியதும் இல்லை. தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி, முழு உலகமும் நன்கறியும்.

எமது குறிக்கோளிலிருந்து நாம் என்றும் தவறவில்லை

தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியரசு அமைப்பதைத் தவிர, தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை எனத் தீர்மானங்கள் நிறைவேற்றி, மக்களிடம் மனுப் பெற்ற கட்சிகளும், ஆயுதப் போராட்டம் மூலமே தனியாட்சி நிறுவ முடியுமென ஆர்ப்பரித்த ஆயுதக் குழுக்களும், எப்பொழுதோ தமது அரசியற் குறிக்கோளைக் கைவிட்டுத் தமிழ் இனத்திற்குத் துரோகம் இழைத்து நிற்கின்றனர். எமது இயக்கம் மட்டுமே அன்றிலிருந்து இன்றுவரை, வரித்துக் கொண்ட குறிக்கோளிலிருந்து வழி தவறவில்லை.

தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாமல் அல்ல. அன்றியும் இந்த இலட்சியத்திற்கு எதிராக, எந்தெந்த சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்குத் தெரியாதது அல்ல. பிரதேச வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும், உலக வல்லரசுகளின் கேந்திர இலக்குகளும் எத்தகைய தலையீடுகளை ஏற்படுத்தும் என்பதையும் நாம் எதிர்பாராமல் இருக்கவில்லை. இந்தச் சவால்கள் எழுந்தபொழுதெல்லாம் நாம் அதைத் துணிந்து எதிர் கொள்ளத் தவறவில்லை, அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட பொழுதும், நாம் கொண்ட கொள்கையைக் கைவிடவில்லை. ஆதிக்க சக்திகளின் ஆவேசப் புயல்களும் எம்மை ஆட்டம் காணச் செய்யவில்லை.

(3 ஆம் பக்கம் பார்க்க)

ஒன்பதாவது அகவையில் உதயன்

அன்புசால் வாசகப் பெருமக்களே!

உதயவேளை வணக்கம்.

உங்கள் உள்ளக் கமலங்களில் நிரந்தரமாக இடம்பிடித்து, நாளாந்தம் அறிவூட்டும் நற்பணி செய்யும் உதயன் நேற்றுடன் தனது எட்டாவது அகவையை நிறைவு செய்து கொண்டான். இன்று தனது ஒன்பதாவது ஆண்டில் கால் பதிக்கின்றான். இந்த நன்னாளில் தனது மகிழ்ச்சியையும், பூரிப்பையும் தனது அன்புக்குரிய உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றான்.

உதயனின் பெருவளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று அளப்பரிய ஆதரவும், உறுதி குலையா ஊக்குவிப்பும் நல்கிய வாசகர்கள், விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள், விற்பனையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள், அன்பர்கள் ஆகிய அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ் மண்ணின் விடுதலைக்காகவும், மக்களின் அரசியல், பொருளாதார, சமூக விடிவுக்காகவும் உழைக்கும் உன்னதமான இலட்சியத்தை இலக்குத் தவறாமல் நிறைவேற்றும் பொருட்டு கடந்த எட்டு ஆண்டுகளிலும் உதயன் தன்னை அர்ப்பணித்து உழைத்தான். அப்போது பல இன்னல்களையும் இடர்களையும் எதிர்கொண்ட போதிலும், உங்களுக்கு ஆற்ற வேண்டிய பணியை, பழுதிலாத் திறனுடன் இயற்றினான்.

ஒரு தேசியப் பத்திரிகைக்கு உரிய கடமைகளை முற்றாக உணர்ந்து, நற்பண்புகளைப் பேணி, மக்கள் நலனையே முன்னிறுத்திப் பொறுப்புடன் உதயன் பணியாற்றுவதை நீங்கள் அறிவீர்கள்.

இனி வரும் காலத்திலும் அவன் அதே வழியில் உறுதியுடனும் உத்வேகத்துடனும் உழைப்பான். மக்களின் அறிவை, மனதை உயர்த்தும் பணி உத்தமமானது; அற்புதமானது. சத்தியத்தை சர்க்கரை பூசி மக்களுக்கு இனிப்பாக வழங்கும் தனது தொண்டை உதயன் தொடர்வான்.

அதற்கான அருட்கொடையை நல்க அளவிலாப் பெருங்கருணைக் கடலாம் இறைவனை இறைஞ்சுகிறோம். அதே போல உங்கள் இதய பூர்வமான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கிறோம்.

நன்றி.

— நிர்வாகத்தினர்.

மூன்று இடங்களில் நேற்று குண்டு வீச்சு!

பாடசாலைகள் சேதம்

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்.குடாநாட்டில் நேற்று சுப்பசொனிக் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதல்களில் இரு பாடசாலைகள் உட்பட பல வீடுகள் பலத்த சேதம் அடைந்தன. பலர் காயம் அடைந்தனர்.

திருநெல்வேலிப் பகுதியிலும், கொக்குவில் பகுதியிலும் வல்வெட்டித்துறை ஊரிக்காட்டுப் பகுதியிலுமே நேற்றுக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

திருநெல்வேலியில், திருநெல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

குடாநாட்டின் பல பகுதிகளிலும்

ஹெலியிலிருந்து நேற்று பரவலாக கலிபர் தாக்கு!

யாழ்ப்பாணம், நவ. 27

குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஹெலிக்கொப்டர்களின் நடமாட்டம் நேற்று அதிகரித்துக் காணப்பட்டது. விமானங்களும், பொம்மர்களும் அடிக்கடி பறந்து பொது மக்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தன. மக்கள் அதிகமாகக் கூடி உள்ள சந்தைகள் போன்ற இடங்களிலும் வீதிகளில் மக்கள் கூட்டமாக நின்ற இடங்களிலும் ஹெலி

(4ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

Prima Lohmann Brown மூன்று கிழமைகள் நிரம்பிய சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் உடன் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28180)

லொறி என்ஜின்

நல்ல நிலைமையிலுள்ள பாவிக்கப்பட்ட B. M. C. லொறி என்ஜின் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. தவகோபால், 527, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (28174)

சிறுவர் நூல்கள்

நத்தார், புதுவருட காலங்களில் சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கக் கூடிய, இங்கிலாந்து, யப்பான் நாட்டுப் புத்தகங்களை தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள; ஸ்ரீகாந், மக்மிலன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி/6566)

மணமகன் தேவை

நட்சத்திரம் மகம், செவ்வாய்க் குற்றமற்ற, 42 வயது மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. தாரம் இழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் கொடுக்கப்படும். கடித மூலம் தொடர்புகொள்ளவும்: இல. 574, மே/பா உதயன், யாழ்ப்பாணம், (28176)

இடமாற்றம்

சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகில் இயங்கிவந்த சோதி புத்தகசாலையும், தனன்கிளப்பு வீதியில் இயங்கிவந்த சோதி அச்சகமும் கச்சாய் வீதியில் உள்ள வர்த்தகத் திணைக்கள மக்கள் கடைக்கு அருகில் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (சி-6609)

தவறிவிட்டது

14-10-93 திகதியன்று யாழ்ப்பாணத்தில் இருந்து சங்கரத்தைக்கு செல்லும் வழியில் எனது காணி உறுதிகளை தவறவிட்டு விட்டேன். எடுத்தவர்கள் திருமதி. ஏ. இராசையா, சங்கரத்தை-வட்டுக்கோட்டை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6819)

உணவுப் பொருள்கள் மற்றும் பொருள்களுடன் கூடிய கைப்பை கடந்த புதன்கிழமை மாலை சாவகச்சேரி சந்தைக்கும், கல்வயல் துர்க்கையம்மன் வீதிக்கும் இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-6615)

UDUVIL GIRL'S COLLEGE

PRESENTS

LOVE'S PURE LIGHT

(A Christmas Cantata)

ON

MONDAY 29TH NOVEMBER

AT 4-30 P. M.

IN THE C. S. I. CHURCH UDUVIL

ALL ARE CORDIALLY INVITED

(C-6604)

JUST OUT!

"O" LEVEL மாணவர்க்குரிய

ஆங்கில இலக்கிய வழிகாட்டி

GUIDE TO

- OLIVER TWIST -

by T. N. Punjaksharam

Rs. 65 -

சகல முன்னணி புத்தக நிலையங்களிலும் விற்பனை ஆகின்றது. விவரங்கட்கு

NEW SCIENCE HALL

Kannathiddy, JAFFNA.

(சி/6562)

ஈராண்டு இதய அஞ்சலி

மறைவு:
27
—
11
—
1991

அமரர் எவ். எம் யோசவ்

[B. A. (Lond.)]

(புனித பெனடிக், புனித பத்திரிசியார் கல்லூரிகளின் இளைப்பாறிய ஆசிரியர்)

அன்புடனும் பண்புடனும் எமை
நெறிப்படுத்திப் பெருவாழ்வு தந்த
அருமைத் தந்தையே!
உங்களை என்றும் அன்புடன் நினைவுகூரும்.

- குடும்பத்தினர்.

104, புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(6598)

நல்ல இனத்து மரம்
நாணயத்தில் தரம்
இந்த மண்ணிற்கான உரம்
பொருண்மியத்தின் வரம்

நல்லின மரக்கன்றுகளை உங்களுக்குத் தேவையான எண்ணிக்கையில் பெற்றுக் கொள்ளலாம்

விற்பனைக்கென உள்ள மரக்கன்றுகளின் விவரம்:

- ஒட்டு மாங்கன்று
- ஒட்டுத் தேசி
- அருள் நெல்லி
- பலாக்கன்று
- கொடித் தோடை
- கொய்யாக் கன்று
- அகத்திக் கன்று
- இலபம் கன்று
- அசோகா
- ஒட்டுத் தோடை
- முழு நெல்லி
- கமுகம் கன்று
- கொடித் தேசி
- மாதுளை
- சப்பொடிலா
- லாவுழுக் கன்று
- மலை வேம்பு
- சமண்டலை

உங்களுக்கு தேவையான நல்லின மரக்கன்றுகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்:

மேஜர் பிரதாப் செட்டி பண்ணை,

இராச வீதி, கோண்டாவில்.

✻ பசுமைப் புரட்சி தமிழீழத்தின் எழுச்சி ✻

[சி-6612]

அளவெட்டி மல்லாகம்
ப. நோ. கூ. சங்கம் (வ-து)
உரும்பராய் வீதி, மருதனார்மடம்.

கிளைக்குழுத் தேர்தல் - 1993

1. நியமனப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் காலம் மு. ப. 9-00 தொடக்கம் 10-00 மணி வரை.

இது **25-11-93** பத்திரிகையில் தவறுதலாக காலம் மு. ப. 9-00 தொடக்கம் 12-00மணி வரை என எம்மால் அறிவிக்கப்பட்டது என்பதை அறியத்தருகிறோம்.

நா. தவநாதன்,
தேர்தல் உத்தியோகத்தர்.

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி-6613)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
10
—
05
—
1927

மறைவு:
08
—
12
—
1992

அமரர் பொன்னம்பலம் நடராஜா

(புங்குடுதீவு-7- நீர்கொழும்பு வர்த்தகர்)

திதி: 27 - 11 - 1993

அன்புக்குரியவரே, அன்பான ஐயாவே!
ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி மீளாத்துயில்
கொண்ட எமது அன்புத் தெய்வமே!
உங்கள் அன்பு முகம் கண்டு ஆண்டு
ஒன்று சென்றாலும்; ஐயா என்ற சொல்
எம்மை விட்டு என்றென்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

15/1, புதிய றோட்,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(28183)

தசாக அழைப்பு

திருமதி கந்தசாமிஐயர் இராசம்மா

தோற்றம்;
01—09—1912

மறைவு:
18—11—1993

சிவபதமடைந்த எமது தாயார் திருமதி கந்தசாமிஐயர் இராசம்மா அவர்களின் தசாகக் கிரியைகள் இன்று (27-11-93) சனிக்கிழமை பகல் 10-00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அனைவரையும் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பெரிய கேணிப்பிள்ளையார்-
கோவிலடி,
எழுதுமட்டுவாழ்.

தகவல்!
க. நாகேஸ்வரக் குருக்கள்
(மகன்)

(28179)

இந்திய, இலங்கை

கூட்டு ஆணைக்குழுவின் 2-வது கூட்டம் ஜனவரியில்

கொழும்பு, நவ. 27

இந்திய, இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் இரண்டாவது கூட்டம் அடுத்த ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங், இலங்கை வெளியுறவு அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீது ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)

எங்கள் மண்ணுக்கு வித்தாகிய
ஈடிணையில்லா மாவீர(தீர)ர்களை
போற்றிக் கௌரவிப்போமாக.

சிறி நதியா நகைமாளிகை,
2G, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6618)

---

45 வயதுக்குட்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கூட்டம்

இடம்: - யாழ். மங்கையர்க்கரசி வித்தியாலயம்
காலம்:- ஞாயிற்றுக்கிழமை (28 — 11 — 1993)
நேரம்: - காலை 9 மணி

குறிப்பு;- தற்போது பகுதிநேர அடிப்படையில் ஆங்கில ஆசிரியர்களாக கடமை புரியும் 45 வயதுக்குட்பட்ட அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

அ. ஜீவாஅமிர்தம்
அமைப்பாளர்.

(28188)

கல்வி ஆண்டு - 1994

புதிய வகுப்புகள் / பிரிவுகள்
(ஆண்டு 4 — 11 வரை)
டிசம்பர் 5 முதல் ஆரம்பமாகின்றன

புதிய அனுமதிகள்

★ இம் மாதம் 25 ஆம் திகதி முதல் வழங்கப்படுகின்றன.
★ டிசம்பர் 31ஆம் திகதியின் பின் வழங்கப்படமாட்டாது.
★ பெற்றோர் நேரில் வந்து அனுமதி பெறுவது விரும்பத்தக்கது.

- அதிபர்.

இணையற்ற சேவையில்......
உயர்ந்து விளங்கும் நிறுவனம்.

EGTD:-1973 REGD:- № J/7993

The Express Institute

IRUPALAI - KOPAY

[28182]

அறிவித்தல்

யாழ். செயலகத் தேவைக்கான தளபாடங்கள் செய்து வழங்குதல், உபயோகிக்கத் தகாத பொருள்கள் ஏலவிற்பனை என்பன தொடர்பான அறிவிப்புகள் தவிர்க்க முடியாத காரணங்களால் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

1. யாழ். செயலகத் தேவைக்கான தளபாடங்கள் செய்து வழங்குதல்
   கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளும் தினம்:
   29 — 11 — 1993 முற்பகல் 11 மணி
   கேள்விப் பத்திரங்களை செயலக நிர்வாக அலுவலர் காரியாலய கேள்விப் பெட்டியில் சேர்க்கும் முடிவு திகதி:
   30 — 11 — 1993 பிற்பகல் 2-30 மணி
2. உபயோகிக்கத் தகாத பொருள்களின் ஏலவிற்பனைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கா. மாணிக்கவாசகர்,
அரசாங்க அதிபரும்
மாவட்ட ஆணையாளரும்.

[சி-6611]

வீர அஞ்சலி

கப்டன் இளையராசா

(ஸ்ரனிஸ்லஸ் மோகனராஜ்)
முள்ளியான் தாளையடி

உயிரினும் மேலான தாயகம் மீட்க,
விடுதலைப்புலியாய் எழுந்து,
பொறிகக்கும் விழியோடு
பூநகரி முகாம் புகுந்து,
பேரினவாத வெறியினை பொசுக்கி,
புவிமீது தமிழன் பெருமையை நாட்டி
ஈழமண்ணின் விதையாகிய கப்டன்–
இளையராசாவிற்கு,
எமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை.

இல, 14 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6616)

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பிறவிக்குணம் மாறாதே!

பூநகரித் தாக்குதல் முடிந்து சுமார் இரண்டு வாரங்களாகி விட்டன. ஆனால், அந்தத் தாக்குதலில் பெரும் எண்ணிக்கையான படையினர் பலியானதற்குப் பதிலடியாக தென்னிலங்கையில் வாழும் தமிழர் மீது பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் ஓயவில்லை.

தெற்கில் எந்த நேரத்திலும் தமிழர்கள் மீது வன்செயல்கள் கட்டவிழ்த்துவிடப்படலாம். கொழும்பு நிலைமை பதற்றமாக உள்ளது. இவ்வாறான தகவல்கள் கடந்த இரண்டு வாரங்களாக விட்டு விட்டு வந்துகொண்டிருக்கின்றன.

வடக்கு - கிழக்கில் நடப்பது அரசாங்கப் படைகளுக்கும் தமிழர் படைக்கும் இடையிலான போர். இந்தப் போரினை அரசாங்கமே 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி உத்தியோக பூர்வமாகப் பிரகடனம் செய்தது.

போர்க்களம் ஒன்றில் சமராடும் இரு தரப்புப் படைகளிலும் போர் வீரர்கள் மடிவதுண்டு. அந்த இழப்புக்குப் பழிவாங்கும் விதத்தில் பொது மக்களைக் கொல்வது, தாக்குவது என்பது போர் வரன்முறைகளுக்கு முரணானது. நாகரிக உலக நெறிகளுக்கு ஒவ்வாதது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசும், அரசின் படையினரும், அவர்களை கட்டியாளும் — வழி நடத்தும் — சிங்கள-பௌத்த பேரினவாதமும் போர் வரன்முறைகள், நாகரிக உலக நெறிகள் என்பனவற்றைப் பற்றிப் பொருட்படுத்துவதில்லை.

சிங்களப் படையினரைக் கொன்றவர்கள் தமிழர்கள். ஆகையால் தமிழர்கள் எல்லோரையுமே பழிவாங்க வேண்டும். அவர்கள் பொது மக்களாயினும் சரி; நிராயுதபாணிகளாயினும் சரி; நோயாளிகளாயினும் சரி. வடக்கு – கிழக்கில் வாழ்பவர்களாக இருக்கட்டும்; தென்னிலங்கையில் வாழ்பவர்களாக இருக்கட்டும். தமிழர்கள் என்பதால் அவர்களைப் பழிவாங்க வேண்டும். இதுவே மேற்சொன்ன மூன்று தரப்பார்களினதும் கோட்பாடு. அவர்கள் தமக்கென வகுத்துக் கொண்ட அநாகரிக வரன்முறை!

சரியாகப் பத்து வருடங்களுக்கு முன்னர் பதின்மூன்று சிப்பாய்கள் வடக்கில் பலியானதற்கு தெற்கில் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் பலி எடுக்கப்பட்டன. அந்த ''83 கறுப்பு ஜூலை'' சிங்களச் ஸ்ரீலங்காவை உலக அரங்கில் தலை குனிய வைத்தது. எனினும் பத்து வருடங்கள் சென்றும் சிங்களப் பேரினவாதம், அதன் கைப்பொம்மையான அரசு, அரசின் படை என்ற முத்தரப்பும் இன்னும் திருந்தவில்லை. பிறவிக்குணம் மாறவில்லை. மாறாது என்பதையே தெற்கிலிருந்துவரும் இப்போதைய தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

உலகம் சொல்வதைச் சொல்லட்டும். தமிழர் சிங்களவரை மேலோங்க விடுவதா? இந்த நாட்டில் அவர்களுக்கு ஏது சொந்தம்? அவர்கள் சிங்களவருடன் சேர்ந்து வாழ்வதானாலும் ஒடுக்கப்பட்டாக வேண்டும் என்ற திமிரான போக்கை மாற்றுவதற்கு முன்னர் குறிப்பிட்ட முத்தரப்பாரும் தயாரில்லை. தெற்கில் இனக்குழப்ப அபாயம் என்பதன் உட்பொருளும் அர்த்தமும் அதுவே.

எனவே இவர்களுடன் சேர்ந்து வாழ்வது என்பதனை தமிழர்கள் நினைத்தும் பார்க்க இயலாது. அதனை ஞாபகப்படுத்தவே அவர்கள் தெற்கில் குழப்பங்களையும் அதற்கான பதற்ற நிலையையும் தோற்றுவிக்கிறார்கள். கஷ்டம் வருவதாலும் நன்மை பிறப்பதுண்டு. இதனைத் தெற்கில் வாழும் தமிழர்கள் மட்டுமன்றி தாயகத்தில் வாழும் தமிழர்களும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மாவீரர் வார வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 27

மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி வட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களில் இறுதி நாளான இன்று சங்கானை வட்டத்தில் காலை 9மணிக்கு பண்ணாகம் விசவத்தனை வீதி துப்புரவு செய்யப்படும். (த)

மக்கள் வங்கி விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம். நவ. 27

யாழ். மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் உள்ள எழுதுவினைஞர், சுருக்கெழுத்தாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி அடுத்த மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 30 ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (இ-3)

ஜி.சீ.ஈ. பரீட்சை அனுமதி அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 27

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் இன்று முதல் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும் என யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சையில் தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் நேற்று யாழ். கல்வி அலுவலகத்தால் கோட்ட கல்வி அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டன.

ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையின் அனுமதி அட்டைகள் நேற்று முன்தினம் விமான மூலம் எடுத்துவரப்பட்டு கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டன. (இ-5)

அரசு இராணுவ... (1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எமது இலட்சியப் போராட்டம் மனித அறத்திற்கு இயைந்தது

தார்மீக அடிப்படையில், நாம் ஓர் உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது; சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள்; தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில், நியாயப்பாடு எமது பக்கமாக இருக்கும் பொழுது நாம் எமது போராட்ட இலட்சியத்தில் உறுதிபூண்டு நிற்க வேண்டும். இலட்சியத்தில் உறுதிபூண்டு இறுதிவரை போராடும் மக்கள்தான் விடுதலையை வென்றெடுப்பார்கள்.

சர்வதேச சூழ்நிலை ஒருநாள் எமக்கு 'சாதகமாக அமையும்

இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை என்பது எமக்குத் தெரியாததல்ல. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுய நலத்தையே முதன்மைப்படுத்துகிறது. மக்கள் உரிமை, மனித உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கின்றன. சர்வதேச அரசியலும் சரி, ராஜதந்திர உறவுகளும் சரி இந்த அடிப்படையில் தான் செயற்படுகின்றது.

இந்த நிலையில் எமது போராட்டத்தின் தார்மீக நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகரித்துவிடும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஆயினும் நாம் அந்த அங்கீகாரத்திற்காகத் தொடர்ந்து குரல் எழுப்பி வரவேண்டும். மாறிவரும் உலகில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழும். ஒரு சந்தர்ப்பத்தில், சர்வதேச சூழ்நிலை எமக்குச் சாதகமாக அமையலாம். அப்பொழுது உலகத்தின் மனச்சாட்சி நியாயத்தின் சார்பாக எமது பக்கம் திரும்பும்.

உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கையில் தங்கியிருக்கவில்லை. எமது வெற்றியானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. நீதியும், நியாயமும் எமது பக்கமாக இருந்தால் மட்டும் போதாது. நாம் வலிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். போராடும் திறமை பெற்றவர்களாக இருக்க வேண்டும். தளராத உறுதி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

பலாத்கார அடிப்படையில் தீர்வு காண அரசு முயல்கிறது

எமது எதிரியான சிங்களப் பேரினவாத அரசு எமது மக்களின் பிரச்சினையை நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் தீர்க்க விரும்பவில்லை. பலாத்காரப் பிரயோகத்தின் அடிப்படையிலேயே தமிழர் பிரச்சினைக்கு முடிவுகட்ட முனைகிறது.

சிங்களப் பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற இராணுவப் போக்கு காரணமாக, தமிழரின் இனப்பிரச்சினை நாற்பது ஆண்டு காலத்திற்கு மேலாக, தீர்வின்றி, முடிவின்றி இழுபடுகிறது. நீண்ட, நெடுங்காலமாக, நீதி கிடைக்குமெனக் காத்திருந்த தமிழர்கள் சாவையும், அழிவையும் தாங்கொணாத் துன்பத்தையும் சந்தித்ததைத் தவிர வேறு எதையும் காணவில்லை.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினைக்குச் சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை வழங்கப்போவதில்லை எனக் காலங்காலமாக நாம் வலியுறுத்தி வந்த அரசியல் உண்மையை எமது மக்கள் இன்று ஆழமாக உணரத் தொடங்கியுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

உலகில் முதல் தமிழர் தாயகம் மாவீரரின் தியாகத்தால் மலரும்

எஸ். பி. கே.

தமிழ் இனத்தை அடக்கியாள எண்ணும் சிங்களப் பேரினவாதம் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாக தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் வன்செயல்களை எதிர்த்துப் போரிட்டு வீரச்சாவடைந்த எங்கள் இளைஞர்களை இந்நாட்களில் நினைவு கொள்கிறோம். சத்தியத்தின் அடிப்படையில் ஒரு நீதியான இலட்சியத்தின் பேரில் போராடி மாவீரராய் விளங்கும் இளவல்கள். இந்த மண் உள்ளவரை நினைவு கொள்ள வேண்டியவர்கள்.

அவர்களின் தியாகத்தைப் போற்றுவதும் அவர்கள் விட்டுச் சென்ற பணியை நிறைவேற்றுவதும் எங்கள் கடமை. அவர்கள் எந்த நோக்கத்துக்காக தங்கள் உயிரை அர்ப்பணித்தார்களோ அந்த நோக்கம் வெற்றிபெற உழைப்பது அவர்களுக்கு நாம் புரியும் கைமாறாகும்.

சிங்கள அரசின் அடக்குமுறைக்கு உட்பட்டு எண்ணற்ற துன்பத்தை அனுபவித்து வரும் தமிழ் ஈழ மக்கள், முனைப்படைந்து வரும் இன்றைய போரைக் கண்டு பயந்துவிடவில்லை. சாவு வாழ்வில் ஒருமுறைதான் வரும். அதனைப் பயனுள்ள வகையில் அடைவது மேல் என்ற அரிய கொள்கையை இளைஞரிடமிருந்து கற்றுக் கொள்கிறார்கள். தமிழ் ஈழம் தனித்து வாழ முடியுமா என்ற ஐயத்துக்கு விடை காணும் வகையில் நிகழும் பல மாற்றங்களைக் கண்டு மகிழ்கிறார்கள்.

தமிழ் ஈழ நிலப்பரப்பு தனியாகப் பிரிந்து வாழ்வதற்குப் போதுமா என்று கேட்டவர்கள் இன்று தமிழ் ஈழத்தை விட சிறிய நாடுகள் பல தன்னாட்சி பெற்றுத் திகழ்வதைப் பார்த்து வியப்படைகிறார்கள்.

நாம் பிரிந்து தன்னாட்சி அமைத்து வாழ்வதற்கு வேண்டிய துணைவளங்கள் தமிழ் ஈழ மண்ணில் உள்ளன என்ற தெளிவு இப்போது பிறந்திருக்கிறது. தமிழ் ஈழத்தில் என்ன பொருள்வளம் இருக்கிறது என்று அன்று கேட்டவர்கள் இன்று வெளிக்காட்டப்படும் எமது மண்ணின் துணை வளங்கள் கண்டு எதிர்காலம் பற்றி நம்பிக்கை கொள்கிறார்கள்.

சிங்கள அரசுகளால் தமிழர் நாம் அடக்கி ஆளப்படுவதும் வன்செயல்களுக்கு உட்பட்டு படிப்படியாக அழிந்து போவதும் [illegible] செல்லும் [illegible] எனவே தமிழர் பிரிந்து வாழ்தல் நல்லது என்ற முடிவை ஏற்று அரசுக்கு எதிராக ஆயுதம் எடுத்துப் போராட முன்வந்த புதிய தலைமுறையினரின் துணிவும் வீரமும் சிறந்த தலைமையும் போற்றுவதற்குரியன

உலகெங்கும் அடக்குமுறைக்கு எதிராக இளைஞர் ஆயுதம் ஏந்திப் போராடும் இக்காலகட்டத்தில் தமிழ் ஈழத்திலும் இளைஞர் அடக்குமுறைக்கு எதிராக வீறு கொண்டு எழுந்ததில் வியப்பில்லை.

ஆனால் தமிழ் மக்கள் எல்லோரும் முழுமையாக ஆட்சியினரின் அடக்கு முறையை எதிர்க்கிறோமா என்பது இன்றுள்ள முக்கிய வினா நாம் பிரிந்து நிற்பதை எதிரி பயன்படுத்துகிறான் என்ற உண்மை யாகுதல் தெளிவாகிறதா? இத்தனை காலம் எம்மை ஏமாற்றியவன் இனி மேல் அணைத்துக் கொள்ளுவானா? கேட்டுப் பெறுவதில்லை விடுதலை என்பதை விடுதலை பெற்ற நாடுகள் பல காட்டி நிற்கின்றன.

உலகம் வியக்கும் இந்த மண்ணின் இளைஞர்கள் மலைபோல் புரளும் எதிரியின் டாங்கிகளுக்கும் மழைபோல் பொழியும் குண்டுகளுக்கும் மத்தியில் நின்று எதிரியை அழித்துத் திரும்பும் மறவர்கள். இவர்கள் வீரத்துக்கும் திறமைக்கும் ஆற்றலுக்கும் பரிசாக தமிழ் ஈழம் மலரும் நாள் வெகு தொலைவில் இல்லை. இந்த மாவீரர்களின் தியாகத்தால் உலகின் முதல் தமிழர் தனிநாடு இங்கே தோன்றும். அது முழுமையான ஒரு நாடாக விளங்கும். ★

மாவீரர் போற்றுதும்

மாவீரர் போற்றுதும் மாவீரர் போற்றுதும்
மண்மீட்க உயிர்நீத்த மாவீரர் போற்றுதும்

சாவிலே சரித்திரம் படைத்தார் இவர்
சந்தோசமாக மரணத்தை ஏற்றார்
நாவிலே தமி ழீழமே ஒலித்தார்
நாட்டை விட்டெதிரியை விரட்டியளித்தார்

சொந்த பந்தங்களைத் துறந்தார் தம்
சொகுசான வாழ்வினை மறந்தார்
ஈழமண்ணை மீட்டிட உயிர் நீத்தார்
இதனாலே எம்மிதயத்தில் நிறைந்தார்

— நீர்வை இரதி.

உங்களுக்கு அஞ்சலிகள்

கொலுவிருத்தி மலர்தூவி விளக்கேற்றி மாலையிட்டு
கொடுக்கின்றார் அஞ்சலிகள் தமிழரேன்...?
ஈழமெனும் திருநாட்டை மீட்பதற்காய்
இன்னுயிரை ஈய்ந்தீரே அதற்காக -
இன்றுங்களுக்கு அஞ்சலிகள்!

கோலமிட்டு கொடியேற்றிப் போற்றி – உங்களுக்கு
கொடுக்கின்றார் அஞ்சலிகள் தமிழரேன்...?
நாளையிந்த திருநாட்டை தமிழர் ஆள
நாளெல்லாம் செய்திட்ட தியாகத்திற்கு –
இன்றுங்களுக்கு அஞ்சலிகள்!

மாங்குளத்தில் மண்கிண்டி பூநகரியில் எதிரிகளின்–
பாசறை யழித்து

மாபெரும் சரித்திரம் படைத்து விட்ட
வேங்கைகளின் வியத்தகு வீரத்தைப் பேச
இன்று ஈழமெங்கும் அஞ்சலிகள்!

— காரைநகர் எம். பி. அருளானந்தன்.

செந்தமிழின் இன்குரலாய் வாழ்க!

எட்டாண் டகவை எழிற்சிரோய் ஊர்ச்செய்தி
நாட்டியு ரிலங்குதயன் நானிலத்தில் – நீளாண்டெம்
ஈழத்தின் செந்தமிழ் இன்குரல் நாதமாய்
வாழத்தெய் வம்வழுத்து வாம்.

— நம. சிவப்பிரகாசம்

"உதயனே" வாழ்த்துகின்றோம்!

நிதமும் உலகில் நிகழும் செய்தி
நமக்குத் தந்து நம்பிக்கை ஓங்க
உதயம் தேடும் எங்கள் வாழ்வில்
உதவிக் கரமாய் ஊக்கம் ஊட்டும்
உதயா! எட்டு ஆண்டுகள் சேவை
உயர்வாய்ச் செய்து தொடரும் பணிக்கெம்
இதயம் நிறைந்து வாழ்த்து கின்றோமே
இனிதே வளர்க இவ்வையகம் எங்கும்!

— நாயன்மார்கட்டு ப' மகேந்திரதாசன்

ஆற்றிடுவாய் தொண்டு பல!

ஆண்டெட்டைத் தாண்டி நிற்கும்,
ஆதவனே ''உதயன்'' நீ;
ஆண்டாண்டாய் வாழ்ந்து இங்கு,
ஆற்றிடுவாய் தொண்டு பல!

— வண்ணை. சே. சிவராஜா

கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் மீண்டும் ஒத்திவைப்பு

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கும், வவுனியா நகர சபைக்குமான தேர்தல்கள் பின் போடப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டது.

இத்தேர்தல்களில் போட்டியிடுவதற்கு முன்வந்துள்ள பல அரசியல் கட்சிகள் வேட்பு மனுக்களைச் சமர்ப்பிப்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள கால அவகாசம் போதுமானதல்ல என்று முறைப்பாடு செய்திருந்தன.

நாடாளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுவரும் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் காரணமாக தமது வேட்பாளர்கள் பட்டியல்களைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அரசியல் கட்சிகள் தெரிவித்திருந்தன.

இதன்காரணமாக உள்ளூராட்சித் தேர்தல்களை பின் போடும்படி அரசியல் கட்சிகள் அரசாங்கத்தைக் கேட்டிருந்தன.

இந்த வேண்டுகோளை ஏற்று, உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் ஜனாதிபதி ரத்துச் செய்துள்ளார்.

இத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் எட்டாம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படவிருந்தன.

இதற்கான புதிய திகதி தேர்தல் திணைக்களத்தினால் உரிய காலத்தில் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

அரசின் கொள்கைகள் குழப்பம் நிறைந்தவை!

தேர்தல் ஒத்திவைப்பு மூலம் நிரூபணம்

கொழும்பு, நவ. 27

கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்கள் மீண்டும் ஒத்திப் போடப்பட்டிருப்பது கிழக்கு மாகாணம் தொடர்பாக அரசுக்குஏற்பட்ட இன்னொரு சங்கடமான முடிவாகும்.

பல விஷயங்கள் குறித்த அரசின் கொள்கைகள், அரசியல் இலக்குகள் இல்லாத குழப்பம் நிறைந்தவை என்ற எதிர்க்கட்சிகளின் வாதத்தை இந்த முடிவு நிரூபிப்பதாக உள்ளது.

—இவ்வாறு பி. பி. ஸி. தனது செய்திக் கண்ணோட்டங்களில் குறிப்பிட்டுள்ளது.

பி. பி ஸி. மேலும் குறிப்பிட்டதாவது:-

பூநகரி முகாம் அழிப்புக்கு பின்னர் இவ்வளவு சீக்கிரம் தேர்தலை நடத்த எடுக்கப்பட்ட முடிவு முட்டாள் தனமானது என்று எதிர்க்கட்சிகள் வ்வரித்தன.

கிழக்கில் தேர்தல்கள் நடந்தால் அதனை படையினர் மேற்பார்வையிடுவது கடினம் என்பதை விடுதலைப் புலிகள் நடத்திய பூநகரி முகாம் அழிப்பு அம்பலப்படுத்தியது.

கிழக்கில் தேர்தல்கள் நடத்தப்படுவது விடுதலைப் புலிகளைச் சீண்டி விடும் செயலாகும் என்று கிழக்கு மாகாண அரசியல் வாதிகள் அரசுக்கு எடுத்துக் கூறியிருந்தனர்.

இரு தரப்பினருக்கும் இடையே நடந்த கூட்டத்தில் தேர்தல்களை பல மாதங்களுக்கு ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டதாக அரசியல் தரப்பினர் கூறுகின்றனர்.

அரசு இப்போது தேர்தலை ஒத்திப்போட்டுள்ளது. ஆனால் தனது மனமாற்றத்துக்கு அரசு வேறு காரணங்களைக் கொடுத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மீள்குடியமர்த்தும் பணி பூர்த்தி செய்யப்படாமை, தேர்தல் இடாப்பு சரியான வகையில் திருத்தப்படாமை, சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்தக்கூடிய பாதுகாப்பு சூழ்நிலை இல்லாமை ஆகியவையே கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் தெரிவித்திருந்த ஆட்சேபனைகளாகும்.

இவ்வாறு பி. பி. ஸி. தெரிவித்தது. (உ-எ-6)

ஜீ. சீ. ஈ. பரீட்சை:

உறுப்பான கையெழுத்துக்கு தேர்வில் விசேட 'சலுகை!

கொழும்பு, நவ, 27

ஜீ. சீ. ஈ. சாதாரண தரப் பத்திரப் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் உறுப்பான கையெழுத்தில் விடைகளை எழுதினால் அதற்கு விசேட சலுகை வழங்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்தும் படி கல்வி, உயர்கல்வி மற்றும் கலாசார அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டாரா பணித்துள்ளார்.

இந்தத் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பமாகும் ஜீ.சி. ஈ. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இருந்து அமுலுக்கு வரும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது பரீட்சார்த்திகள் பாடப் பொருளில் மட்டுமே கவனஞ் செலுத்தி, கையெழுத்தை அசட்டை செய்து வருவதாகவும் —

அதனால் விடைத்தாள்களைத் திருத்தி மதிப்பெண்கள் வழங்கும் அதிகாரிகள் மிகுந்த சிரமப்படுவதாகவும்—

பரீட்சைத் திணைக்களம் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்து, அமைச்சர் முன்கண்ட உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-6)

அரசு இராணுவ... (3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப் பாதைக்கு நாம் குறுக்காக நிற்கவில்லை!

எமது இயக்கம் என்றுமே சமாதானப் பாதைக்குக் குறுக்காக நிற்கவில்லை. சிங்கள அரசுக்கு நாம் எத்தனையோ சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்புவில் தொடங்கி கொழும்பு வரை பேச்சுவார்த்தைகளில் பங்குகொண்டோம். ஆனால் சிங்கள அரசு தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதையும் முன் வைக்க மறுத்தது. சமரச வழியைக் கைவிட்டு, போர்க்களத்தில் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பியது.

1990ஆம் ஆண்டு, ஜூன் மாதம், இரண்டாவது கட்டமாக தமிழீழப் போர் ஆரம்பமாகிய காலந்தொட்டு, எமது விடுதலை இயக்கம், சமாதானத்தின் கதவுகளை அகலத் திறந்து வைத்தது. பேச்சுவார்த்தைக்கு இணங்கி நாம் நேசக்கரத்தை நீட்டிய பொழுதெல்லாம் சிங்களப் பேரினவாதம் அதைப் பற்றிக்கொள்ள மறுத்தது. போர் நிறுத்தம் செய்து, பொருளாதாரத் தடைகளை நீக்கி, சமாதானத்திற்கான சூழ்நிலையை உருவாக்குமாறு நாம் மாறி மாறி விடுத்த கோரிக்கைகளையும் நிராகரித்தது. சமாதானத்திற்குப் பதிலாக யுத்தத்தையும், அமைதிக்குப் பதிலாக அழிவையும் சிங்களப் பேரினவாத அரசு எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டது. இறுதியில் தமிழரின் உரிமைப் போராட்டத்தை ''பயங்கரவாதம்'' எனச் சித்திரித்துக் காட்ட முனைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லையெனப் பகிரங்கமாகவே பிரகடனம் செய்துள்ளது.

சிங்களப் போர் அரக்கனுக்கு தகுந்த பதிலடி கொடுத்தோம்

இராணுவ பலத்தைக் கொண்டு தமிழரின் சுதந்திர இயக்கத்தை அழித்துவிடலாம் என்ற இறுமாப்பில் சிங்கள ஆளும் வர்க்கம் சமாதானத்தின் கதவுகளை இறுகச் சாத்திவிட்டது. தமிழ் மண்ணை ஆக்கிரமித்து, தமிழரை அடக்கியொடுக்கி ஆளவேண்டுமென்ற குறிக்கோள் முன்பிருந்ததைவிடத் தீவிர போக்கை எடுத்தது. இந்த இராணுவவாதக் கடும்போக்கின் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணக் குடாநாடுமீது படையெடுப்புகளை நடத்தவும் அரசு திட்டம் தீட்டியது.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில் தான் நாம் சிங்களப் போர் அரக்கனுக்கு தகுந்த பதிலடி கொடுக்கத் தீர்மானித்தோம். மண்கிண்டிமலையிலும், புலோப்பளையிலும், இறுதியாகப் பூநகரியிலும் நாம் திட்டமிட்டு நிகழ்த்திய வெற்றிகரமான தாக்குதல்கள் சிங்கள இராணுவ வாதத்திற்குக் கொடுக்கப்பட்ட பேரடிகளாகும். இதில் பூநகரிச் சமர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. போர்க்கலையில் புலிகள் இயக்கத்தின் படிநிலை வளர்ச்சியின் உயர்கட்டப் பரிமாணத்தை இந்தச் சமர் எடுத்துக்காட்டுகிறது. பெரும் படையணிகளை நுட்பமாக நகர்த்தி, எதிரியின் பாசறையைப் பலமுனைகளில் ஊடுருவி, பெரும் கூட்டுப்படைத் தளங்களைக் கூட துரிதகெதியில் அழிக்கவல்ல அபாரமான சக்தி புலிகளிடமுண்டு என்பதை நாம் சிங்களப் பேரினவாதத்திற்கு நன்கு உணர்த்தியுள்ளோம். இனப் பிரச்சினையே இல்லாமல் போய்விட்டது என்று கூறியவர்களுக்கு இனப் பிரச்சினையின் விஸ்வரூபத்தைக் காட்டியுள்ளோம். இந்தச் சமர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதப் படையினர் அழிக்கப்பட்டுள்ளனர். எமது தாயக மண்மீது படையெடுப்பை நடத்தலாம், ஆக்கிரமிப்பை நிகழ்த்தலாம். அகலக்கால் வைக்கலாம் எனக் கற்பனை செய்துவரும் இராணுவவாதிகளுக்கும் பேரினவாதிகளுக்கும் புலிகளின் இந்தத் துணிகரத் தாக்குதல்கள் தகுந்த பாடமாக அமையும் என நினைக்கிறேன். இராணுவத் தீர்வு என்ற பாதை எத்தகைய பயங்கரமான பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதை கொழும்பிலிருந்து ஆட்சிபுரிபவர்கள் இனியாவது உணர்ந்து கொள்வார்களென நம்புகிறேன்.

சமாதானக் கதவுகளை நாம் அடைத்துவிடவில்லை

சிங்களப் பேரினவாத அரசு போன்று நாம் இன்னும் சமாதானக் கதவுகளை அடைத்துவிடவில்லை; சமரசப் பாதைக்கு முட்டுக்கட்டை போடவில்லை. ஆனால் சிங்கள ஆட்சிபீடம் தனது இராணுவ அணுகுமுறையை இறுகப் பற்றிக்கொண்டு, எமது மண் மீது படையெடுப்பை நிகழ்த்தினால் அல்லது எமது மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடருமானால் எமது விடுதலை இயக்கம் சமாதானத்தின் கதவுகளை நிரந்தரமாகவே மூடிவிடும் என்பதை நான் இங்கு தெட்டத்தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படுமென நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை.

மாவீரர் காட்டிய பாதையில் எமது இலட்சியப் பயணம்

சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனி அரசு என்ற ஒரே பாதையைத்தான் தமிழீழ மக்களுக்குத் திறந்துவைத்திருக்கிறது. அந்தப் பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை.

இந்தப் பாதைவழியேதான் எமது விடுதலை இயக்கம் தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறது.

இந்தப் பாதை மிகவும் கடினமானது. கற்களும், முட்களும் நிறைந்தது. விலங்குகளும், விஷ ஜந்துக்களும் நிறைந்தது. ஆயினும் நாம் இந்தப் பாதை வழியே எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

எமது மாவீரர்கள் இந்தப் பாதை வழியாகவே நடந்தார்கள்; எமக்கு வழிகாட்டியாக முன்னே சென்றார்கள்; கற்களையும் முட்களையும் அகற்றி, பாதையைச் செப்பனிட்டுத் தந்தார்கள்; விலங்குகளையும், விஷஜந்துக்களையும் கொன்றழித்தார்கள்; அந்தப் பாதை வழியே விளக்கேற்றி வைத்தார்கள்.

எமது மாவீரர்கள் ஏற்றி வைத்த அந்தச் சுடரொளியில், தெளிவாகப் புலப்படும் அந்தச் சுதந்திரப்பாதை வழியாக, நாம் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோமாக.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாண்டிக்குளம் தடைமுகாம் பகுதியில் படையினர் சூடு!

மூன்று பயணிகள் காயம்

யாழ்ப்பாணம், நவ. 27

வடக்கில் இருந்து வவுனியா செல்வதற்காக காத்திருந்த பொதுமக்கள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பெண்கள் உட்பட மூவர் காயம் அடைந்தனர்.

நேற்று முன்தினம் காலை 9.45 மணி அளவில் நொச்சிமோட்டையில் இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

படையினரின் தாண்டிக்குளம் தடை முகாமைக் கடந்து செல்வதற்காக சம்பவ தினம் சுமார் 400 பேர்வரை நெச்சிமோட்டை பாலத்துக்குச் சமீபமாக வரிசையாக காத்து நின்றனர். அப்போது காவலரணில் நின்ற படையினர் திடீர் என காட்டுப் பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பயணிகள் நின்ற பகுதியை நோக்கி இரண்டு ஷெல்களும் ஏவப்பட்டன.

பீதி அடைந்த பயணிகள் பாதுகாப்புக்காக விழுந்து படுத்தபோது அவர்களில் மூவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயம் அடைந்தனர்.

கனகராயன் குளத்தைச் சேர்ந்த அரியபுத்திரன் தனிநாயகம் (வயது 36) என்பவரும் காயம் அடைந்தவர்களில் ஒருவர் ஆவார்.

அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

தம்முடன் இரு பெண்களும் காயம் அடைந்தனர் என்றும்—

அவர்கள் ஓமந்தை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்றும் காயம் அடைந்தவர் தெரிவித்தார். (இ-15)

வீதிகள்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாநகரில் வன்செயல்களுக்கு திட்டமிடப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்கு எற்கனவே தகவல் கிடைத்திருந்தது என்றும்—

இதனைத் தொடர்ந்தே கொழும்பில் நேற்று பதற்றம் நிலவியதாகவும் கொழும்பு செய்தி வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அதே சமயம் கொழும்பில் முப்படைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடரும் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (இ-6-3)

அகதிகளுடன் சந்திப்பு

கொழும்பு, நவ. 27

தமிழ்நாட்டில் இருந்து திரும்பி வந்து வவுனியா ஆசிகுளம் முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை ஆஸ்திரேலிய தூதரக அபிவிருத்தித்துறை உதவியாளர் பட்ரிக் டெனிஸ் சந்தித்துப் பேசினார்.

அகதி முகாம்களைப் பார்வையிட்ட அவர் வவுனியாவில் உள்ள தொண்டர் நிறுவனங்களின் பிரதி நிதிகளையும் சந்தித்தார்.

ஐ. நா. நிறுவனமான யுனிசெப்பின் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த இரு உயர் அதிகாரிகளும் அகதி முகாம்களைப் பார்வையிட்டனர்.

மூன்று..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலி முத்துத்தம்பி வித்தியாலயப் பக்கமாகவும் பாற்பண்ணைப் பக்கமாகவும் இரு குண்டுகள் வீசப்பட்டன.

இந்தக் குண்டு வீச்சுக்களின் போது கனகு செல்வநாயகம் (வயது 21) என்பவர் காயம் அடைந்தார். வயோதிபர் ஒருவரின் வலது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டது. பாடசாலையும் இரு வீடுகளும் சேதம் அடைந்தன. குண்டு வீச்சு நடந்த இடத்திற்குச் சிறிது தூரத்தில் இராச வீதியில் நின்ற இராசரத்தினம் ஷர்மிளா(வயது 14) என்ற சிறுமியும் இத் தாக்குதலின் போது தலையில் காயம் அடைந்தார்.

கொக்குவில் பகுதியிலும் இரு குண்டுகள் வீசப்பட்டன. எனினும் ஒன்று வெடிக்கவில்லை. இக் குண்டுத் தாக்குதலின் போது கொக்குவில் இராமகிருஷ்ண சாரதா மகளிர் வித்தியாலயம் பலத்த சேதம் அடைந்தது.

ஆசிரியை தம்பிராசா ஸ்ரீ பற்குணம் (வயது 42), ஆசிரியை இராசரத்தினம் தங்கரத்தினம் (வயது 44), மாணவிகளான சிவகுமார் அகல்யா (வயது 19), விக்னராஜா அஜந்தினி (வயது 15) ஆகியோரும் மற்றும் சில மாணவிகளும் காயம் அடைந்தனர்.

குண்டுவீச்சுக்கு முன் ஹெலி ஒன்று வட்டமிட்டு தாக்குதல் நடத்தியதால் கீழ் வகுப்பு மாணவர்கள் நேரத்துடன் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர் என்றும்—

இதனாலேயே பலர் உயிர் தப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை ஊரிக்காட்டுப் பகுதியில் சிதம்பராக் கல்லூரிக்குச் சமீபமாக நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின்போது தென்னை மரங்கள் முறிந்தன. குண்டுச் சிதறல்கள் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் தெறித்துப் பறந்தன என்றும் குண்டுச் சிதறல்களால் சில இடங்களில் வேலிகள் தீப்பிடித்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் பளை — அல்லிப்பளையில் நேற்று புக்காரா விமானத்தில் இருந்து கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(155-77-117-162-69-3-17 111-143)

ஹெலியிலிருந்து.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்று கலிபர் தாக்குதல்களை நடத்தின.

இத்தாக்குதல்கள் காரணமாக பொதுமக்கள் சிலர் காயம் அடைந்தனர்.

வீதியால் சென்ற வாகனங்கள், கடைகள், மற்றும் வீடுகள் சேதம் அடைந்தன.

நேற்றுக் காலை சாவகச்சேரி சந்தைப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் நுணாவிலைச் சேர்ந்த இரத்தினம் தர்மராசா (வயது 27) என்பவர் காயம் அடைந்தார். பஸ் நிலையப் பகுதியில் நின்ற வாகனங்கள் சிலவும் சேதம் அடைந்தன;

கொடிகாமம் சந்தைப் பகுதியில் இடம் பெற்ற தாக்குதலில்சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த மரக்கறி வியாபாரியான வேலுப்பிள்ளை நடராசா (வயது 69) என்பவர் காயம் அடைந்தார்.

பளை நகரப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலிலும் மூன்று பேர் காயம் அடைந்தனர்.

அவர்களில் ஒருவரான பளை, தர்மக்கேணியைச் சேர்ந்த இரத்தினம் இருபாகரன் (வயது 21, என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மற்றும் வல்வை வீதி புத்தூர் மேற்கு, மருதடிப் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்தவர்களை நோக்கியும் ஹெலியில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. மயிலியதனை, கெருடாவில், வல்லை ஆகிய இடங்களில் வீடுகள் சேதம் அடைந்தன. கப்பூர் மலை வாசி ஒருவரின் காரும் சேதம் அடைந்தது.

(இ-17-143-117-155-11-15)

கொழும்பில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தாக்குதலை நடத்தலாம் அல்லது கொழும்பில் உள்ள தமிழர் மீது சில சிங்கள இனவாதக் குழுக்கள் தாக்குலை நடத்தக் கூடும் என்று நிலவிய வதந்திகள் அனைத்தும் பொய்யாகி விட்டன'' என்றார். கொழும்பில் எவ்வித வன்செயல்களும் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை.

வதந்திகள் காரணமாக மக்கள் கொழும்புக்கு வருவதைத் தவிர்த்துக் கொண்டனர் என்று கருத இடமுண்டு.

மத்திய வங்கியின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த ஜீப் ஒன்றை பொலிஸார் சோதனை இட்டனர்.

பின்னர் அதன் உரிமையாளர் வந்து ஜீப்பை எடுத்துக் சென்றார்.

இச் சிறு சம்பவத்தைத் தவிர வேறு அசம்பாவிதங்கள் கொழும்பில் இடம்பெற்றதாக அறிவிக்கப்படவில்லை. (இ-6)

மாவீரர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒளிப்பிரகாசமாக இருந்தது.

பெரும் சுடர்கள், தீப்பந்தங்கள், சிட்டி விளக்குகள் என்று எங்கும் ஒரே சோதிமயமாக இருந்தது. இரவு வேளை இருள் மறைந்து தமிழீழம் ஒளிப் பிழம்பாக மாறியது.

மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள், உரித்துடையவர்கள் மாவீரர் சுடரொளிகளை ஏற்றினர். அவ்வேளை மாவீரர் சுடரேற்றல் பாடல் இசைக்கப்பட்டது.

தமிழீழம் இவ்வாறு ஒளிப் பிழம்பாகக் காட்சியளித்த வேளை தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் புலிகளின் குரல் வானொலியில் மாவீரர் நினைவுரை ஆற்றினார். தலைவரின் உரை குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

நேற்றுக் காலை 9. 30 மணியளவில் இல்லங்களிலிருந்து அழைத்து வரப்பட்ட மாவீரர்களின் பெற்றோருக்கு 10. 30 மணியளவில் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து இசை நிகழ்ச்சிகளும், ஒளிப்படக் காட்சிகளும் இடம் பெற்றன.

அதனையடுத்து மதிய உணவு வழங்கப்பட்டது.

இதனையடுத்து, மாவீரர்களின் பெற்றோருடன் போராளிகள் கலந்துரையாடினர்.

பின்னர் மாவீரர்களின் பெற்றோர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தில் 16 இடங்களில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

குண்டுவீச்சின் மத்தியிலும்

குண்டுவீச்சு விமானங்கள், ஹெலிக்கொப்டர்களின் பேரிரைச்சலுக்கும், குண்டுத் தாக்குதலின் மத்தியிலும் நேற்று மக்கள் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் அமைக்கப்பட்ட அலங்கார வளைவுகளின் இரு மருங்கிலும் பனை மரத்திலான பீரங்கிகளின் மாதிரிகள் வைக்கப்பட்டிருந்தன. அதே போல புலி வீரர்கள் 50 கலிபர், ஏ.கே. 47 ரகதுப்பாக்கிகளுடன் காவல் அரண்களில் நிற்பது போன்று உருவக் காட்சிகளும் அங்கு வைக்கப்பட்டிருந்தன

வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள சங்கானை மண்டியக் குளத்தில் மாவீரர் கிட்டுவின் திருவுருவ படம் வைக்கப்பட்ட படகு ஒன்று மிதக்கவிடப்பட்டிருந்தது. இந்தப் படகு மஞ்சள் சிகப்பு நிறங்களில் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பல இடங்களில் மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட ஊர்திகளும் பவனியாக எடுத்துவரப்பட்டன. (அ-3-5-15-17)

ஷெல் வீச்சில் பலி!

யாழ்ப்பாணம், நவ. 27

மாவீரர் நினைவாக மணியோசை ஒலித்து ஓய்ந்து கொண்டிருந்த வேளை — இன்று அதிகாலை 12.02 மணிக்கு — பலாலி இராணுவ முகாமில் இருந்து மல்லாகம் பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது ஒரு பெண் மரணமானார். மற்றொரு பெண் காயமடைந்தார். இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

மல்லாகம் கோட்டைக்காட்டில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மாவீரர் வணக்கத்தை மேற்கொண்டிருந்த முத்துலிங்கம் அம்பிகாவதி (வயது 48) என்பவரே யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரும்போது இடைவழியில் மரணமானார்.

சிறிகாந்தன் யோகேஸ்வரி (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

கொழும்பில் 9 தலைவர்களை கொல்ல புலிகள் ஊடுருவல்!

கொழும்பு, நவ. 27

ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகள் மற்றும் தமிழ்க் கட்சிகள் ஆகியவற்றைச் சேர்ந்த ஒன்பது தலைவர்களைக் கொலை செய்வதற்கென கொழும்புக்கு வந்ததாகக் கூறப்படும் நான்கு விடுதலைப் புலிகளை பொலிஸார் கைது செய்தனர்.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி இத் தகவலை வெளியிட்டது.

இவர்கள் நால்வரும் கொழும்பிலும் அதன் சுற்றும் புறங்களிலும் கைது செய்யப்பட்டனர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட அரசியல் வாதிகளின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்நால்வரும் எப்போது கைது செய்யப்பட்டனர் என்பது தெரிவிக்கப்படவில்லை. (உ-6)

ஒத்திவைப்பு!

மனைப் பொருளியல் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட குறுவினா, தையல் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாகவும், போட்டிகள் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் மனைப் பொருளியல் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர். சண்முகரட்ணம் அறிவித்துள்ளார். (த)

இயங்காது

மாவீரர் தினமான இன்று பருத்தித் துறையில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நடைபெறமாட்டாது. (இ-5)

தமிழின விடிவுக்காய் மரணித்த
தேசம் தூங்கியபோது விழித்திருந்த
எல்லைசுற்றி வேலிச் சிலையாய் நின்ற
ஈழ மண்ணின் புது விதைகளான
விடுதலையில் தீச்சுடராகி நிற்கும்
மாவீரர்களுக்கு எமது அஞ்சலிகள்!

சுப்பஸோ வீடியோ ஓடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-6619)

மரண அறிவித்தல்கள்

கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி

(Rtd. District Train Controller, Malaysia)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கந்தர் மடத்தில் வசித்தவருமான க. சின்னத்தம்பி (26-11-93) இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற பகவதியின் அன்புக் கணவரும் மகேந்திரன் (சட்ட அறிஞர் - கொழும்பு), மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், அமிர்தராணி (Rtd. statistical Officer கொழும்பு), பேராசிரியர் பாலகிருஷ்ணன் (யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோரின் மாமனாரும், இந்திரன், பிரதாபன், வசந்தன், பிரசன்னா, பிரமிளா (கொழும்பு) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26-11-93) பிற்பகல் 3 மணிக்கு இல- 27 கந்தர்மட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்
பேராசிரியர். பாலகிருஷ்ணன்
(மருமகன்)

இல. 27, பழம் றோட்,
கந்தர்மடம்.
(28185)

முத்துக்குமாரு பொன்னையா

புங்குடுதீவு மேற்கு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 90, குறுக்கு வீதி, நல்லூரில் வசித்தவருமாகிய முத்துக்குமாரு பொன்னையா அவர்கள் 26-11-93 இல் காலமானார்.

அன்னார் மீனாட்சியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான அப்பையா (பிரபல வர்த்தகர்), செல்லத்துரை (பிரபல வர்த்தகர் - யாழ்ப்பாணம், கொழும்பு), சிவக்கொழுந்து சின்னத்துரை, நாகம்மா தம்பிராசா, பாலசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர், வைத்தீஸ்வராக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் காலஞ் சென்றவர்களான செல்லையா, நல்லதம்பி, சின்னத்துரை, மாணிக்கம் பொன்னாச்சி, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு. செ. தம்பிராசா அவர்களின் சகலனும் காலஞ் சென்ற நடேசன், மாவீரர் நடேஸ், திருமதி செல்வி சிவபாலன் (லண்டன்), மோகனராசா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (27-11-93) சனிக்கிழமை காலை 10 மணிக்குச் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

தகவல்:
சி. பாலசிங்கம்

90, குறுக்கு வீதி,
நல்லூர்.
(28187)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 27 - 11 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.